Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No.CC.NO. 13/2023
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS (PW) No.08 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. காதர்கான் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. முகமத்கான் | தொழில் | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 3rd day of February 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.-** (எதிரி மனுவின் பேரில் ஆஜர் இல்லை)

1. நான் தற்போது திருப்பத்தூர் நெடுஞ்சாலை சாலை ரோந்து பணியில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2022 வருடம் நான் ஜோலார்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது உதவி ஆய்வாளர் திரு. செல்வராஜ் என்பவர் என்னுடன் பணியாற்றினார். அவருடைய கையொப்பம் நன்கு தெரியும் என்பதால் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 07.04.2022 அன்று உதவி ஆய்வாளர் திரு. செல்வராஜ் நிலைய பொறுப்பில் இருந்த போது மேல் அச்சமங்கலம் கிராமத்தை சேர்ந்த செந்தூர் காந்தி மனைவி இரதிதேவி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அதன் அடிப்படையில் நிலைய குற்ற எண். 109/2022 இதச பிரிவுகள் 454, 380 கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். (அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ– 09 ஆக குறியீடுசெய்யப்படுகிறது ) வழக்கினை விசாரணைக்கு எடுத்துகொண்ட திரு. செல்வராஜ் 08.04.2022 அன்று காலை 06.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுரேஷ் மற்றும் புஷ்பாவதி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மாதிரி வரைப்படம் தயார் செய்தார். ( அவை முறையே அ.சா.ஆ. 10, 11 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. ) பினனர் இவ்வழக்கு சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பை என் வசம் ஒப்படைத்தார். வழக்கினை மேல் விசாரணைக்கு

எடுத்துகொண்ட நான் திருப்பத்தூர் காவல் நிலையக்குற்ற எண். 248/2022 ல் இவ்வழககு எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் இவ்வழக்கிலும் ஈடுபட்டுள்ள விவரம் தெரிய வந்து அவரை சம்பிராதய கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மேலும், எதிரியிடம் இருந்து 2 சவரன் தங்க சங்கிலி கைப்பற்றபட்டு அதை படிவம் –95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். ( **அந்த படிவம் 95 அ.சா.ஆ–12 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** ) பின்னர் எனது விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 454, 380 கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

உதவி ஆய்வாளர் திரு. செல்வராஜ் விசாரித்த சாட்சிகளை நான் மறுவிசாரணை செய்ய வில்லை என்றால் சரிதான். 2 முதல் 5 பட்டியல் சாட்சிகள் புகார்தாரர் புகார் அளித்த சாட்சிகள் என்றால் சரிதான். காலதாமதமாக அ.சா.1 புகார் அளித்ததற்கான காரணத்தை விசாரிக்க வில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகாரில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். திருப்பத்தூர் நகர காவல் நிலைய குற்ற எண். 248/2022 என்ற வழக்கில் பரிமுதல் செய்யப்பட்ட நகையை இவ்வழக்கு நகையாக பாவித்து எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், எனக்கு முன்னால் விசாரணை செய்த அதிகாரியின் ஆவணங்களை சரிவர பார்காமல் எதிரி மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

KODHAVADI SUBRAMANIAN DINESH

Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH

Witness sign

Judicial Magistrate No.01
Thirupattur